# திருப்பரங்குன்றத்தின் வரலாறு

( Legends of Tirupparankunram by R.K.Das )

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : பீ. தியாகராஜன்
தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com )

மதுரை ரயில் நிலையத்தின் தென் மேற்குப் பகுதியில் சுமார் மூன்று மைல் கல் தொலைவில் உள்ளது இந்த ஆலயம். சுப்பிரமண்யர் தன் தங்க புனித இடமாக தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆறு இடங்களில் இதுவும் ஒன்று. இந்த ஆலயத்தின் மகத்துவம் என்ன என்றால் இங்குதான் இந்திரனின் மகளான தெய்வயானையை அவர் திருமணம் செய்து கொண்டார். பராசர முனிவரின் ஆறு புதல்வர்களும் ஒரு சாபத்தின் விளைவாக சரவணப் பொய்கை நதியில் மீனாகப் பிறந்திருந்தனர். அவர்கள் சாப விமோசனம் பெற வேண்டும் எனில் சுப்ரமண்யரிடம் வேண்டிக் கொள்ளும்படி கூறப்பட்டனர். அவர் தரிசனம் கிடைத்துதும் அவர்கள் சாப விமோசனம் பெறுவார்கள் எனவும், அசுரன் சூரபத்மனை அழித்தப் பின்னர் அவர் திருப்பரங்குன்றத்துக்கு வருவார் எனத் தெரிந்ததும் அவருடைய வரவை ஆவலுடன் எதிர் பார்த்தபடி அவர்கள் அங்கு இருந்தனர்.

தன்னுடைய கடமையான சூரபத்ம சம்ஹாரத்தை திருச்செந்துரில் முடித்துக் கொண்டு, அவனால் பலவேறு சித்திரவதைகளுக்கும் ஆளாகி இருந்த தேவர்களை விடுவித்துக் கொண்டு அவர்களுடன் சுப்பிரமண்யர் அங்கு வந்தார். அவர் அங்கு வந்து சேர்ந்ததும் பராசர முனிவரின மைந்தர்கள் அவரை அன்புடன் வரவேற்றனர். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அவர்



திருப்பரம்குன்ற கோபுரமும் மலையும்



திருப்பரம்குன்ற திருக்குளமும் மலையும்



**திருப்பரங்குன்றத்தில் சுப்ரமண்யர் இடப்புறத்தில் தெய்வயானை உடனிருக்க, வலப்புறத்தில் நாரத முனிவர் உள்ளார்**

அங்கு தங்க முடிவெடுத்ததும் உடனேயே விஸ்வகர்மாவை அழைத்து தனக்கும் தன்னுடன் வந்துள்ள அனைத்து தேவர்களுக்கும் தங்க வேண்டியதற்கான அற்புதமான இடத்தைக் கட்டுமாறு ஆணையிட்டார். அது மட்டும் அல்ல அந்த இடத்தை சுற்றி நல்ல சாலைகளையும் அமைக்குமாறு கூறினார். தங்களை சூறையாடிய அசுரன் சூரபத்மனை சுப்ரமண்யர் அழித்ததின் நன்றிக் கடனாக அவருக்குத் தன் மகள் தேவசேனாவை அவருக்கு திருமணம் செய்து கொடுக்க ஆசைப்பட்டார். அங்கு கூடி இருந்த பிரும்மா மற்றும் விஷ்ணுவிடம் அவர் தன் ஆசையைக் கூற அவர்களும் அதைப் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அது குறித்து அவர்கள் சுப்ரமண்யரிடம் கூறியதும் அவரும் அதை ஏற்றுக் கொண்டபின் கூறினார் " தெய்வயானையும் இமயமலையில் உள்ள சரவணப் பொய்கையில் அதை எதிர் பார்த்தபடி வேண்டிய வண்ணம் இருக்கின்றாள்" . சுப்ரமண்யர் சம்மதத்தைத் தெரிவித்ததும் அபு மலையில் இருந்த தன்னுடைய மனைவி இன்திராணியையும், மகள் தெய்வயானையையும் அழைத்து வருமாறு தன் தூதுவனை அனுப்பினார். திருப்பருங்குன்றத்தில் நடக்க இருந்த திருமணத்திற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சீதை, பார்வதி முதல் அனைத்து தேவ தேவதைகளும் வந்திருந்து தெய்வயானைக்கும் சுப்ரமண்யருக்கும் ஆசி கூறி வாழ்த்தினர். அது முதல் அந்த இடம் புகழ் பெற்ற சுப்ரமண்ய ஸ்தலமாக மாறியது. சுப்ரமண்யர் கண்டவீர்ப்பு என்ற இடத்தில் தங்கி இருந்த பொழுது மகாவிஷ்ணுவின் இரண்டு புதல்விகளான அமிருதவல்லியும் சுந்தரவல்லியும் தங்களுக்கும் சுப்ரமண்ய கடவுளுடன் திருமணம் நடக்க வேண்டும் என்று ஆசை கொண்டு சரவணப் பொய்கைக்கு வந்து தங்கி தவம் இருந்தனர். அவர்கள் தவத்தை மெச்சி அவர்கள் முன் காட்சி தந்த சுப்ரமண்ய கடவுள் அமிருதவல்லியை நோக்கி " நீ இந்திரனின்



**சுந்தரவல்லியும், அமிருதவல்லியும் தங்களுடைய தந்தையிடம் முருகனை திருமணம் செய்து கொள்ள வரம் தரும்படிக் கேட்டனர்.**

மகளாகப் பிறந்தவுடன் தக்க சமயத்தில் வந்து உன்னை மணப்பேன் " என்றார். அது போலவே இளையவளான சுந்தரவல்லிக்கும் காட்சி தந்தார். அதனால் அவளும் சிவ முனிவரின் மகளாகப் பிறந்து நம்பி என்ற வேடர் குலத் தலைவனால் வளர்க்கப்பட்டாள்.

அமிருதவல்லி ஒரு சிறிய பெண்ணாக வடிவெடுத்து மேரு மலையில் இருந்த இந்திரனிடம் சென்று " நான் மகாவிஷ்ணுவின் மகள் ஆவேன். என்னை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை உங்களுக்குத் தந்து இருக்கின்றார் என்பதினால் இங்கு வந்தேன் " என்றாள். அதனால் மிகவும் மகிழ்சி அடைந்த இந்திரனும் யானை ஐராவதனை அழைத்து அந்தக் குழந்தையைப் பாதுகாக்கும்படிக் கூறினார். அந்த யானையும் மிகவும் மகிழ்சியுடன் அதை ஏற்ற பின் அவளை எடுத்து வளர்க்க அவள் திருமண வயதை எட்டினாள். அதனால்தான் அவள் யானையால் வளர்க்கப்பட்டாள் என்பதைக் குறிக்கும் விதத்தில் தெய்வயானை என்ற பெயர் பெற்றாள். சூரபத்மனை அழித்துவிட்டு சுப்ரமண்யர் திரும்பியதும் அவருடன் அவளுக்கு திருமணம் ஆயிற்று.